Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 10
போன் 389 National Tamil Daily இதழ் 103
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கைவை வைகாசி 11 ஸபர் 25 வெள்ளிக்கிழமை (24-5-68)



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# திருமலையில் கோர பஸ் விபத்து கண்டக்டரும் இருவரும் பலி

## பெண்களுட்பட 34 பேர் உயிருடன் போராடுகின்றனர்

### பாதுகாப்பற்ற கடவையில் ரயிலுடன் பஸ் மோதிய அவலம்

— நமது நிருபர் து. பாலேந்திரா —

திருக்கோணமலை, வியாழன்

**திருக்கோணமலையில் இன்று முற்பகல் நடந்த கோர பஸ் - ரயில் விபத்து ஒன்றில் பஸ் கொண்டக்டர் உட்பட மூவர் ஸ்தலத்திலேயே பரிதாபகரமாக மாண்டனர். அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த மேலும் முப்பத்திநான்கு பேர் மிக ஆபத்தான நிலையில் திருக்கோணமலை ஆஸ்பத்திரியில் உயிருடன் போராடிக்கொண்டிருக்கின்றனர். இந்த விபத்து இன்று முற்பகல் 11-45 க்கு திருமலை சந்தி மடம் ரயில் கடவையில் ஏற்பட்டது.**

திருக்கோணமலையின் சரித்திரத்திலேயே இதுபோன்ற கோர பஸ் விபத்தொன்று நடைபெற்றதில்லை.

இன்று அதிகாலை ஐந்து மணிக்கு தொண்டமானாற்றிலிருந்து கொடிகாமம் வழியாக திருமலைக்கு வந்த பஸ் வண்டி சந்தி மடத்தடியிலுள்ள, பாதுகாப்பற்ற ரயில் கடவையில், ரயில் பாதையில் சென்று கொண்டிருந்த ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்து நடந்த சமயம் அந்த பஸ்ஸில் சுமார் 40 பிரயாணிகள் இருந்தனர். குழந்தைகளும் பெண்களும் இருந்த அந்த பஸ், ரயிலுடன் மோதி சுமார் கால்மைல் தூரம் இழுத்துச் செல்லப்பட்டது.

பஸ்ஸுக்குள் இருந்தவர்களும் அந்தச்சமயம் வீதியில் நின்றவர்களும் கூச்சலிட்டனர். பஸ் உடைந்து நொருங்கி துண்டு துண்டாக கழன்று விழுந்தது. திருக்கோணமலையிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த ரயிலுடன்தான் பஸ் மோதியது.

விபத்து நடந்த இடத்திலேயே பஸ் கொண்டக்டர் சிவஞானசுந்தரமும் மற்றும் இருவரும் மாண்டனர். தகவல் கிடைத்ததும் பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்தனர். பொது மக்களின் உதவியுடன் பொலிசார் காயமடைந்து, பேச்சு மூச்சின்றிக் கிடந்த இதர பிரயாணிகளை அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். ஆஸ்பத்திரியில் பெண்கள் உட்பட 20 பேர் மிக ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலருக்கு இன்னும் மூர்ச்சை தெளியவில்லை.

விபத்து நடந்த இடம் ஒரே சோகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. சந்தி மடம் ரயில் கடவையில் பாதுகாப்புச் செய்ய வேண்டுமென நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்தும் நகரசபையினரும் மற்றையோரும் கவனிக்கவில்லையெனப் பொதுமக்கள் பலர் குற்றம் சுமத்தினர். ரயில் சென்று கொண்டிருந்த போதும், அதைக் கவனிக்காமல் பஸ்ஸை செலுத்திச் சென்ற சாரதியையும் பொது மக்கள் காரசார

[8-ம் பக்கம் பார்க்க]

## வெள்ளை அறிக்கையை ஜே. ஆர். தயாரிப்பார்?

கொழும்பு, வியாழன்

மாவட்ட சபை சம்பந்தமான வெள்ளை அறிக்கையைத் தயாரிக்கும்படி பிரதமமந்திரி டட்லி சேனநாயக்கா ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைக் கேட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட்டு இன்னும் சில தினங்களில் மந்திரிசபையிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் மந்திரிசபை நகலுசட்டத்தோடு வெள்ளையறிக்கையை ஆராயும் என்றும் நம்பப்படுகின்றது. அதன் பிறகே வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்று தெரிகின்றது.

பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்தொடரின் முதல் மசோதாவாக மாவட்ட சபைமசோதா சமர்ப்பிக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் ஹேஷ்யம் தெரிவிக்கின்றன.

மாவட்டசபை மசோதா பற்றிய வெள்ளை அறிக்கை அடுத்தமாதம் முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென தெரியவருகிறது. மந்திரிசபை மசோதாவை இன்னும் முற்றாக பரிசீலனைசெய்துமுடிக்காததால் நாளை மீண்டும் கூடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமருடன் நேற்று தாங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகள் முற்றாக திருப்தி அளிப்பதாக தமிழரசுக் கட்சி பொது செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 195 வது சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

முதல் பரிசு

42 Z 0615 ரூ. 100,000

2-ம் பரிசு

C 27 F 0746 ரூ 40,000

3-ம் பரிசு

05 J 0477 ரூ 10,000

தலா ரூபா 564 பெறும் 100 டிக்கட்டுகள் விபரம்.

| | |
|---|---|
| 05 J 0129 | 39 U 0342 |
| 11 Y 0534 | 42 V 0288 |
| 42 R 0900 | 43 N 0161 |
| 14 A 0517 | 15 Y 0442 |
| 33 Z 0116 | 44 F 0031 |
| 16 U 0969 | 44 Z 0815 |
| 40 F 0269 | 05 V 0193 |
| 29 H 0971 | 26 A 0522 |
| 37 G 0839 | 03 D 0917 |
| 41 E 0894 | 33 O 0833 |
| 33 S 0009 | 30 K 0595 |
| 36 P 0802 | 12 Z 0698 |
| 05 U 0863 | 32 L 0151 |
| 33 Y 0431 | 16 X 0316 |
| 10 L 0704 | 17 E 0391 |
| 18 Q 0808 | 17 X 0690 |
| 17 H 0023 | 31 W 0873 |
| 43 Q 0351 | 22 L 0005 |
| 12 N 0862 | 15 V 0322 |

(8-ம் பக்கம் பார்க்க)

## 'சமுதாயம் முன்னேற வேண்டுமானல் பழக்கவழக்கங்கள் மாறவேண்டும்

### தர்மகர்த்தாக்கள் சபை வருடாந்த கூட்டத்தில் உடுவில் எம். பி. பேச்சு

— நமது நிருபர் எஸ். ஆர். ஞானசுந்தரம் —

அளவெட்டி, வியாழன்

"ஆலயப் பிரவேசம் சமூகப் பிரச்னையாதலால்தான் அரசியல் வாதிகள் தலையிடுகிறார்கள் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச்சட்டம் இயற்றப்பட்டதன் நோக்கம் சமூகக் குறைபாடுகளை நீக்குவதற்கே. எனவே எம். பி.க்களை சமய விரோதிகள் என்று கருதுவது பொருந்தாது" என சீரிமலை சிவன் கோவில் மண்டபத்தில் அகில இலங்கை ஆலய தர்மகர்த்தாக்கள் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறினார்.

பிரம்மஸ்ரீ து. துரைச்சாமிக்குருக்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இருநூற்றிற்கு மேற்பட்ட தர்மகர்த்தாக்கள் கலந்து கொண்டனர்.

திரு. தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: சமுதாயம் முன்னேற வேண்டுமாயின் சில வழமைகளையோ பழக்க வழக்கங்களையோ மாற்றுவதில் தவறில்லை. இன்று தமிழ் இனத்துக்குஏற்பட்டிருக்கும் நெருக்கடி நீக்கப்படவேண்டும். சைவசமயத்தவர் பிற மதத்[illegible] படவேண்டும். சைவசமயத்தில் ஒரு பகுதியினருக்கு ஆலயதரிசன உரிமை அளிப்பதனை மறுப்பது சரியாகாது.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தை அமுல்நடத்துவதில் தமிழ் எம். பி.க்கள் காட்டுகின்ற தீவிரம் சைவ மதத்தையே அழித்துவிடும் என அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை வெளியிட்டிருக்கும் கருத்து உண்மைக்குப் புறம்பானது. இச் சட்டத்தை முதன்முதலில் கொண்டு வந்த அமரர் வல்லியசிங்கம், அமரர் ராஜவரோதய

[8-ம் பக்கம் பார்க்க]

## நள்ளிரவு வரை சபைக்கூட்டம் நீடித்தது

கொழும்பு, வியா.

முக்கிய அலுவல்கள் பலவற்றை நிறைவேற்றுவதற்காக மக்கள் பிரதிநிதிகள் சபை இன்று இரவு வெகு நேரம்வரை நீடித்தது. சபை நடவடிக்கைகளை நீடிப்பதற்காக நிரந்தரவிதிகள் ரத்து செய்யப்பட்டன. பல முக்கிய மசோதாக்கள் சபை முடிவதற்குமுன் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

புதிய கடைகள்:

கோண்டாவில் வில் உள்ள யாழ்ப்பாணம் இ. போ. ச. மத்திய டிப்போவுக்கு நேர் எதிராக அமைந்துள்ள புதிய கடைகள், உடனடியாக வாடகைக்கு விடப்படும். விபரங்களுக்கு: 238, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 1498

### தேவை

மோட்டார் உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யும் கடைக்கு உதவி விற்பனையாளர் தேவை. கிருஷ்ண மோட்டோர்ஸ், உயிலங்குளம், மன்னார். 1500

நல்லநிலையிலுள்ள ஆங்கில தட்டெழுத்து இயந்திரம் தேவை. அசோக்கா எஞ்சினியரிங் கோப்பறேஷன், உயிலங்குளம், மன்னார் 1499


## புதிய நியமனம்

சங்கானை, வியாழன் வலி-காமம் மேற்குக் காரியாதிகாரி கந்தோரில் உணவு உற்பத்திப்பிரிவுக்கென பிரத்தியேக லிகிதராக தலையாழி கந்தையா இம் மாதம் 20-ம் திகதி தொடக்கம் உணவு இலாகாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.


ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ நடித்த
நான் யார் தெரியுமா?

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, &9-45 P. M.
DICK TRACYAND HIS 'G' MEN
(Serial)

4-வது வாரம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜிகணேசன் நடிக்கும்
மனோகரா


# வட இலங்கை சங்கீத சபை பரீட்சை முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், வெள்ளி

வடஇலங்கைச் சங்கீத சபையின் 1967-ம் வருடப் பரீட்சை முடிவுகள் வருமாறு:

ஒவ்வொரு பகுதியிலும் சித்தி பெய்துவோரின் பெயர்கள் அவரவர் சித்தி பெய்திய தரத்துக்கேற்ப 1-ம் பிரிவு, 2-ம் பிரிவு, சாதாரணபிரிவு, நூனசித்தி என்னும் பிரிவுகளின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

x சாஸ்திரப் பரீட்சையில் சித்தியடையவில்லை.

o சாதனை பரீட்சையில் சித்தியடையவில்லை.

## சாவகச்சேரி

### முதலாம் பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

ஆனந்தேஸ்வரி நல்லையா, திருமகள் திருச்சிற்றம்பலம், பத்மலோஜனி மகாதேவன், கோமதி சிவசம்பு.

### இரண்டாம் பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

சிவஞானம் நாகமுத்து, சாந்தகௌரி அரியரத்தினம், தயாபரன் சின்னத்தம்பி, ரஜினி சங்கரப்பிள்ளை, விஜயலட்சுமி தம்பிப்பிள்ளை, சுபேந்திரா தேவி வைத்திலிங்கம், புஷ்பநிதி செல்லையா, சரோஜினி தேவி காவிராசா, இரத்தினபூபதி ஆறுமுகம், அம்பிகை சுப்பிரமணியம், கமலேஸ்வரி கந்தையா.

### மூன்றாம் பகுதி

சாதாரணபிரிவு

வாய்ப்பாட்டு

பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை, லோகாம்பிகை பொன்னுச்சாமி, தவமணி பூபாலசிங்கம்.

வயலின்

செல்லம்மா செல்லத்துரை, கமலாதேவி பேரம்பலம், செல்வராணி கந்தையா, விமலேஸ்வரி சுவாமிநாதன், மகாருட கமணி பதஞ்சலி.

### நான்காம் பகுதி

சாதாரணபிரிவு

வாய்ப்பாட்டு

வசந்தா பரமசாமி, மதுரவசனி திருஞானசம்பந்தர், சரஸ்வதிப்பிள்ளை கார்த்திகேசு, ஸ்ரீ வாமதேவா பொன்னுத்துரை.

வயலின்

விஜயலக்ஷ்மி கணேசன்.

நூனசித்தி

வாய்ப்பாட்டு

o செல்வதிலகம் செல்லத்தம்பி, x கமலாதேவி சின்னையா, x பவானி சோமசுந்தரம், x வரகுணராணி மார்க்கண்டு, x வனிதாமணி மார்க்கண்டு, x புவனேஸ்வரி முருகேசு, ஜானகிதேவி சிற்றம்பலவாணர், x இராசபூபதி ஆறுமுகம், x நல்லம்மா சதாசிதம், x சரோஜினிதேவி கனகசபை.

### ஐந்தாம் பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

முத்துப்பிள்ளை சின்னத்தம்பி, தெய்வநாயகி கிருஷ்ணசாமி, நாகம்மா சின்னத்தம்பி.

நூனசித்தி வாய்ப்பாட்டு

சுந்தரேஸ்வரி கணபதிப்பிள்ளை.

### முதலாம் பகுதி

சாதாரண பிரிவு

மிருதங்கம்

ஸ்ரீதரன் சின்னையா, அருட்சோதி கணபதிப்பிள்ளை.

### இரண்டாம் பகுதி

சாதாரண பிரிவு

o செய்ந்தன் கனகசபாபதி

## கொழும்பு

### முதலாம் பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

சரோஜினி வேலாயுதம், நளாயினி குமாரசாமி, தேவலோசனி குமாரசாமி, ரஞ்சிதமலர் சிவசுப்பிரமணியம், கிரிஜா சுப்பிரமணியம், பாலகுமாரன் குமாரசிங்கம், சந்திரிகா சிவஞானம், யசோதா ஏகாம்பரநாதன், மஞ்சுளா திருநாவுக்கரசு, இந்திராணி பாலசிங்கம், சாந்தி யோசெவ், விஜேந்தினி திருநாவுக்கரசு, பிருந்தா கெங்காதரன், மாலினிதேவி இராசையா, அம்பிகை வைத்திலிங்கம், மங்கையர்க்கரசிவைத்திலிங்கம், அமலன் சண்முகநாதன், மங்களகௌரி இராஜேந்திரா, செந்திரு கந்தையா, சாந்தாரமணி கந்தையா, பதமினி கனகரத்தினம், சந்திரிகா ஆனந்தராஜன், விக்னேஸ்வரி காளிமுத்து.

வயலின்

ரங்கநாயகி பஞ்சாட்சரம், யசோதா ஏகாம்பரநாதன், மனோகரி அமிர்தலிங்கம், மஞ்சுளா திருநாவுக்கரசு, சிவகாமசுந்தரி அமிர்தலிங்கம், கலாநிதி சிவசுப்பிரமணியம், திலகவதி வைத்திலிங்கம்.

வீணை

லாமி சுலோஜனு சோமசுந்தரம், சுபானி தேவராஜன், பாலினி தேவராஜன், யசோதரா துரைசிங்கம், மனோகரி சண்முகம், யஸ்மின் டானியேல், கலாவாணி கதிர்காமன், வசந்தா விஸ்வலிங்கம், புஷ்பவதி அம்பலவாணர்.

புல்லாங்குழல்

கணநாதன் சக்திவேல்.

ஜலதரங்கம்

ஜயந்தி கேதீஸ்வரன்.

### இரண்டாம் பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

அருந்ததி ஆறுமுகம், விஜயராணி செல்லத்துரை, பத்மினி சுந்தரமூர்த்தி, குமுதினி மகேந்திரன், ரஜனி பூபாலசிங்கம், சாந்தி கணபதிப்பிள்ளை, பானுமதி தியாகராஜா, அகிலா ஆறுமுகம், ராகினி சச்சிதானந்தம், சிவாணி சுந்தரநடராசா, விஜேந்தினி கனகசபாபதி, சாந்தினி பாலகிருஷ்ணன், சிவதேவி சிவசம்பு, ஜெகதாம்பாள் ஆனந்தராயன், விமலன் பாலச்சந்திரன், அம்பிகா தேவி கணேசலிங்கம்.

வயலின்

சரோஜினிதேவி சதாசிவம், ரஞ்சிதமலர் சச்சிதானந்தம் தேவயோகினி தேவதாசன், வசந்தரா வேலுப்பிள்ளை.

வீணை

பரமேஸ்வரி பேரம்பலம், யோகமலர் தனபாலசிங்கம், திருமகள் தம்பிப்பிள்ளை, கௌரியாம்பிகைகந்தையா, ரோகினி சுப்பிரமணியம்.

புல்லாங்குழல்

சேஷாத்திரி மணி, நிமலராஜ் தாமோதரம்.

[8-ம் பக்கம் பார்க்க]


REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Gregory Peck & Sophia Loren
in
ARABESQUE


## விளம்பரம்

கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம் 17-ம் பிரிவின் படியான அறிவித்தல்

என் 1941 — 1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் [அத்தியாயம் 257] 17 (5) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார வலுவைக்கொண்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் முருகவேள் ஆகிய நான் இதன் அட்டவணை பத்தி 1ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணைப் பத்தி 11 ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி 111 ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி 4 ல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகின்றேன்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

சு. முருகவேள்

உள்ளூராட்சி அமைச்சு
யாழ்ப்பாண அலுவலகம்
யாழ்ப்பாணம்.
16 வைகாசி 1968

பத்தி 1
கிராமச்சபையின் பெயர்
மல்லாகம்

பத்தி 11
திகதி 31-5-68

பத்தி 111
நேரம் 10-00 மு. ப.

பத்தி 4
இடம்
கிராமசபை அலுவலகம்
மல்லாகம்

GP 5684


### தேநீர்க் கடை கமிஷனுக்கு

நாவாந்துறை வடக்கில் இருக்கும் தேநீர்க்கடை சகலதளபாடங்களுடன் கமிஷனுக்கு கொடுக்கப்படும். விபரங்களுக்கு நேரில் சந்திக்கவும்.

கா. ந இளையதம்பி,
284, K. K. S. வீதி
672, யாழ்ப்பாணம்.


## மருந்துகள் தட்டுப்பாடு

சுழிபுரம், வியாழன்

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளிகள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனராம். இதுபற்றி மேலிடத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


இலங்கை—இந்திய பட்டதாரி
சித்த ஆயுள்வேத வைத்தியர்களால்
சுத்தமாக தயாரிக்கப்பெற்ற
மாத்திரைகள், சூரணம்,
செந்தூரம், ஆஸவம், அரிஷ்டம்,
லேகியம், களிம்புகள்,
தைலங்கள், எண்ணெய்
வகைகள் முதலியன
எந்நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

58, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்", 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

சென்னையில் 100 நாட்களுக்கு ஓடிய சிறந்த வள்ளுவ காவியம்!

கெப்பிட்டல் (கொழும்பு) 2-00, 6-00, 9-30
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) 2-30, 6-30, 9-30

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' — இதற்கு நீங்கள் சொல்லப்போகும் பதில்

மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன்
சரோஜாதேவி
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
பேபி ஷகிலா
தங்கவேலு
நடித்த

ஸ்ரீ முத்துக்குமரன் பிக்சர்ஸ் அளிக்கும்



பெற்றால்தான் பிள்ளையா?

டைரக்ஷன்: கிருஷ்ணன்-பஞ்சு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரான்சில் டிகோல் ஆட்சி உயிர் தப்பியது

## எதிர்க்கட்சிக்கண்டனப்பிரேரணை 11 வாக்குகளால் தோல்வி

பாரிஸ், மே 23

**பிரெஞ்சு அரசாங்கம், பிரெஞ்சு தேசிய அசெம்பிளியில் இடதுசாரி எதிர்க்கட்சிகளின் ஐக்கிய முன்னணி கொண்டுவந்த கண்டனப் பிரேரணைகளிலிருந்து உயிர் தப்பிவிட்டது. பிரேரணை மீதான வாக்களிப்பில் 244 வாக்குகள் பிரேரணையை எதிர்த்தும், 233 வாக்குகள் பிரேரணைக்கு ஆதரவாகவும் கிடைத்தன. பிரேரணை 11 வாக்குகளால் தோல்வியடைந்தது.**

வழக்கமாக அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் மத்திய கட்சியினர், இடதுசாரிக் கட்சிகளின் இப்பிரேரணையை ஆதரித்து இம்முறை வாக்களித்தனர். டிகோல் கட்சியைச் சேர்ந்த முன்னாள் மந்திரி ஒருவரும் பிரேரணையை ஆதரித்தார். அவர் ஆளுங் கட்சியிலிருந்து ராஜினுமா செய்துள்ளார்.

### பிரதமர் பேச்சு

பிரேரணை மீதான விவாதத்தில் பங்குபற்றிப் பேசிய பிரெஞ்சுப் பிரதமர் திரு. பொம்பாடு, தொழிற்சங்கத் தலைவர்களுடன் தொழிற்துறைப் பிரச்னைகளையிட்டுப் பேசுவதற்குத் தாம் தயாராகவிருப்பதாகக் கூறினுர். ஆனும், தொழிற்சங்கத் தலைவர்களின் கோரிக்கைகளும் நியாயமாக இருக்கவேண்டுமென அவர் குறிப்பிட்டார் நாட்டில் பல சீர்திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தமது பேச்சில் தெரிவித்தார்.

பிரதமரைச் சந்திப்பதில் தமக்கு ஆட்சேபமில்லை எனத் தெரிவித்த தொழிற்சங்கத் தலைவர்கள், அரசாங்கம் நிபந்தனையிடும் விதிகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் அமையக்கூடாதென்றும், இப்போது நடைபெறும் வேலைநிறுத்தங்கள் தொடர்ந்து நடைபெறுமென்றும் கூறியுள்ளனர்.

### மாணவர் ஆர்ப்பாட்டம்

பிரெஞ்சு அசெம்பிளியில் டிகோல் ஆட்சிமீதான கண்டனப் பிரேரணை விவாதிக்கப்பட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் வெளியே ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தற்போது நெதர்லாண்ட்ஸுக்குச் சென்றுள்ள மாணவர் தலைவரான திரு. டானியல் என்பவரைப் பிரெஞ்சு அரசாங்கம் மீண்டும் தாயகம் திரும்புவதற்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டதே, இந்த ஆர்ப்பாட்டங்களுக்குக் காரணமாகும்.

ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களைக் கலகப் பொலிஸார் அடித்துத் துரத்தினர்.

---

## 15-வது இருதய மாற்றம்

நியூயோர்,மே 23

அமெரிக்காவில் டெக்சால் நகர ஆஸ்பத்திரியில் மீண்டும் ஓர் இருதய மாற்றுப் பொருத்த சத்திர சிகிச்சை நடைபெற்றுள்ளது.

இருதயம் பொருத்தப்பட்டவரின் உடல் நிலை நன்ருக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. இந்த ஆஸ்பத்திரியில் இது நான்காவது சத்திரசிகிச்சையாகும். உலகில் இது 15-வது இருதய மாற்று சத்திர சிகிச்சை.

55 வயதுடைய ஒருவருக்கு 17 வயதான வாலிபர் ஒருவரது இருதயம் பொருத்தப்பட்டது. இந்த வாலிபன் மூளை இரத்தப் பெருக்கம் காரணமாக மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

---

## லண்டனில் சாம்ராஜ்ய மாதர்கள் மாநாடு

லண்டன் மே 23

சாம்ராஜ்ய மாதர்கள் மாநாடு ஒன்று நேற்று லண்டனில் ஆரம்பமாகியது பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி மந்திரி திரு. ரெக் பிரின்டிஸ் இந்தமாநாட்டை ஆரம்பித்துவைத்தார். லண்டன் மால்பரோ மாளிகையில் ஆரம்பமாகியுள்ள இம்மாநாட்டில் இலங்கை, இந்தியா உட்படச் சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்குமதிகமான மாதர்கள் பங்குபற்றிவருகிருர்கள். இந்த மாநாடு மூன்று தினங்கள் வரை நடைபெறும்.

திரு. ரெக் பிரின்டிஸ் இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், 'அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைச்சேர்ந்த பெண்மணிகள் தத்தம் நாடுகளின் தேசிய நிர்வாகத்துறையில் பெரும் பங்கு வகிக்கமுடியுமென எடுத்துரைத்தார். தேசிய பொருளாதார அபிவிருத்திப் பணியில் மாதர் சமூகம் பெருமளவில் உழைக்க முடியும் என்றும், இந்தச்சந்தர்ப்பங்களை அவர்களுக்கு வழங்காது விடக்கூடாதெனவும் மந்திரி தொடர்ந்து கூறினுர்

---

## நைஜீரியா உகாண்டாவில் பேச்சுக்கள்

கம்பாலா, மே 23

நைஜிரிய உள்நாட்டுப் போரைத் தீர்க்குமுகமாக, சமஷ்டி நைஜீரியாப் பிரதிநிதிகளுக்கும் பிரிவினை 'பியாவ்ரா'ப் பிரதிநிதி [illegible] [illegible] த்தைகள் ஆரம்பமாகின.

---

## ஹெயிட்டிக் குடியரசு மீது ஆக்கிரமிப்புப்புகார்

போர்ட் ஓ பிரின்ஸ் மே23

தென் அமெரிக்கக் குடியரசான ஹெயிட்டியில் கடந்த திங்கட்கிழமை நடந்த இராணுவ ஆக்கிரமிப்பு முயற்சியொன்றை படுத்து அது ஐ.நா. சபையில் ஒரு புகாரைத் தாக்கல் செய்துள்ளது.

திங்கட்கிழமை ஆயுதந்தாங்கிய கோஷ்டியொன்று ஹெயிட்டிக் குடியரசு எல்லைகளை மீறி உட்புகுந்து தாக்கியது. அரசாங்கத் துருப்புகள் அக்கோஷ்டியை முறியடித்து விட்டது. கோஷ்டியைச் சேர்ந்த 16 பேர்கைப்பற்றப் பட்டனர். மற்றும் பத்துப் பேர் கொல்லப்பட்டனர்.

ஐ. நா.சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகாரில் தனது எல்லைகளில் பக்கத்திலுள்ள டொமினிக்கன் குடியரசு துருப்புக்களைக் கொண்டு வந்து குவிப்பதாக ஹெயிட்டி குற்றஞ்சாட்டியுள்ளது. கரிபியனிலுள்ள அமெரிக்கப் படைகளும் எஷார் நிலையில் வைக்கப் பட்டுள்ளதாக அது தெரிவித்துள்ளது.

---

## இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மெல்போண் சென்றுர்

கான்பெரா, மே 23

ஆஸ்திரேலியாவில் தற்போது விஜயம்செய்துவரும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, இன்று காலை சமஷ்டித் தலைநகரான கான்பெராவிலிருந்து மெல்போண் போய்ச் சேர்ந்தார்.

கான்பெராவில், பிரதமர் இந்திரா, ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. கோர்டனுடன், தென் கிழக்காசியா, வியட்னும், மேற்கு ஆசியா, இவை சம்பந்தப்பட்ட பிரச்னைகளைப் பொதுவாக ஆராய்ந்தார்.

---

## வர்த்தகசபை மாநாடு

லண்டன், மே 23

சாம்ராஜ்ய வர்த்தகசபை சம்மேளனத்தின் 23-வது மாநாடு நேற்று லண்டனில் ஆரம்பமாகியது. மவுண்பேட்டன் பிரபு இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்தார். இலங்கை உட்பட 18 சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த 104 வர்த்தகர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றி வருகிருர்கள்.

'உலக பொருளாதார கூட்டணிகளில் சாம்ராஜ்யம்' என்னும் விடயம் பற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும். இந்த மாநாடு நான்கு தினங்கள் வரை நடைபெறும்.

---

## விபத்தில் 8 பொலிசார் மாண்டனர்

புதுடில்லி, மே 23

உத்தரபிரதேசத்தில் 'டிரக்' ஒன்று பள்ளத்தில் தடம்புரண்டு விழுந்ததால் 8 பொலிஸ் அதிகாரிகள் ஸ்தலத்திலேயே மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

---

யாழ்.இளை

## எழுது வினைஞர் சங்க உறுப்பினர்

யாழ்ப்பாணம், வெள்ளி

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 20-ம் திகதி யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. எஸ்.இரத்தினசபாபதி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தாய்ச் சங்க உபதலைவர் திரு. ஏ. பி. நஞ்சிகொடை விசேஷமாகக் கலந்து கொண்டார்.

அடுத்த ஜூன் மாதம் 2-ம் திகதி வருடாந்த மாநாட்டைக் கொண்டாடுவது பற்றி இக் கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டது. புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ்.கணேசன் [யாழ்ப்பாணப் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்], உபதலைவர்கள்: திரு. ரி. வேலுப்பிள்ளை (சமூக சேவைப் பகுதி) திரு. எஸ். அல்பிரட் (துணுக்காய் காரியாதிகாரி கந்தோர்], செயலாளர்: திரு. ரி. பி. திருவருள் [யாழ்ப்பாணம் செயலகம்], உப செயலாளர்: திரு. கே. விவேகானந்தன் [கல்வி இலாகா], பொருளாளர்: திரு. வி. பொன்னம்பலம் [கூட்டுறவுப் பகுதி] உப பொருளாளர்: எஸ். ஜேவல் [உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்]

திருவாளர்கள்: எஸ்.ஜேகதாஸன், எஸ். பெரியதம்பி, ஆர். எஸ். செல்லத்துரை, பி. எஸ். என். விக்கிரமசிங்க, கே. துரைசிாமணி கே. வி. சிவசுப்பிரமணியம், டபிள்யூ ஆர். இராசநாயகம், என். சிவக்கொழுந்து, டி. இ. விக்கிரமாராச்சி, எஸ். கனகசபேசன் ஆகியோரைக்கொண்ட நிர்வாகக் கமிட்டியொன்றும் தெரியப் பட்டது.

[கா. நி]

---

## ரஷ்யாவில் பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி

### வியட்னும் பிரச்னை பற்றி ஆலோசனை

மாஸ்கோ. மே 23

மாஸ்கோ வந்து சேர்ந்துள்ள பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு மைக்கேல் ஸ்டீவாட் ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோவை சந்தித்து வியட்னும் சமசதானம் பற்றிபேசியுள்ளார்.

ஜெனீவா உடன்படிக்கையின் இணைத்தலைமை நாடுகள் என்ற ரீதியில் ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் வியட்னும் பிரச்னைக்குத் தீர்வுகாணும் பொறுப்பு அதிகம் என்று பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி கருத்து வெளியிட்டதாகத் தெரிகிறது.

ஆனுல் வியட்னுமில் அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கையை பிரிட்டன் ஆதரிக்கும்வரை ஜெனீவா உடன்படிக்கை இணைத்தலைமை நாடு என்ற முறையில் பிரிட்டனுல் ஆக்கபூர்வமாக எதுவும் செய்ய முடியாது. என்று ரஷ்ய வட்டாரங்கள் கூறியுள்ளன.

---

## நோயாளிகள் உடல்நிலை அறியக் கம்பியூட்டர்கள்

லண்டன்; மே 23

சிகிச்சை நடைபெறும்போது நோயாளிகளின் உடல்நிலையை அறிய இனிக் கம்பியூட்டர்கள் பயன்படும்.

சத்திரசிகிச்சையின்போது நோயாளியின் இதயத் துடிப்பு இரத்த அழுத்தம் இரத்த ஓட்டம், நாடித் துடிப்பு சுவாசம் மற்றும் பலவகையான நிகழ்ச்சிகளைத் தானே பதிவு செய்துகொள்ளும் ஒரு புதுவகை கம்பியூட்டரைபிரிட்டிஷ்நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது. இந்த இயந்திரத்தை நோயாளியின் உடலோடு இணைத்து விட்டால் அவரது உடலில் ஏற்படும் மாறுதல்களை அப்படியே குறித்துக்கொண்டு விடும்.

இவைதவிர உடல் நிலை தேறினுல் அல்லது மோசமடைந்தால் இந்தக்கம்பியூட்டர் உள் உடனுக்குடன் பதிவு செய்து தெரிவித்துவிடும். இதனுல் நிலைமைக்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதில் தாமதம் தவிர்க்கப்படும்.

பிரிட்டனில் உள்ள மருத்துவ ஆராய்ச்சிச்சபை [illegible] ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

---


## ஏஜென்டுகள் தேவை

லயன் மினரல் வாட்டேர்ஸ் தயாரிப்புகளான போட்டெல்லோ, கொக்கோகோலா ஸ்ட்ஜாம், அன்ட் கோடியல் ஆகியவற்றை வவுனியா, மாங்குளம் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை ஆகிய பட்டினங்களில் விநியோகம் செய்வதற்கு ஏஜென்டுகள் தேவை கவர்ச்சியான விற்பனை ஒப்பந்தம் உத்தரவாதம் செய்யப்படும்.

மேற்கொண்டு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்:-

விற்பனை மனேஜர்,

பிளவர் பெவரெஜெஸ் கொம்பனி லிமிட்டெட்,

தபால்பெட்டி இல. 1313,

கொழும்பு — 2 687

## மணிவாக்கு

ஒருவர் மீது அன்பாக இருக்கும் போது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. பலர் மீது அன்புசெலுத்துகையில், நம் மகிழ்ச்சியும் அதிகரிக்கிறது. எல்லாரையும், எல்லாவற்றையும் நேசிக்கும் போது, நமது இன்பத்துக்கு எல்லையுண்டா?

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram/ EELANADU Jaffna
Post Box/ 49 Jaffna
Telephone 389.

யாழ்ப்பாணம் கீலகவருஷம் வைகாசி மாதம் 11-ந் திகதி
(24-5-68)

## அரசியல் நெருக்கடி

சர்ச்சைக்கிடமாகியுள்ள மாவட்டசபைகள் மசோதா காரணமாக ஒரு பெரும் அரசியல் நெருக்கடியை உருவாக்குவதற்கு தமிழரசுக் கட்சி விரும்பவில்லை. பிரதமரின் நேர்மையில் தங்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறதென்றும் தமிழரசுக்கட்சிப்பொதுச் செயலாளர் தெரிவித்திருக்கிறார். அரசியல் நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்த்து நாட்டின் அமைதியைப் பாதுகாப்பதற்கு தமிழரசுக் கட்சி உதவியிருக்கிறதென்று சொல்வதைவிட மூலகாரணமாக இருக்கிறதென்று சொல்வதே பொருத்தம். இதற்காக தமிழரசுக்கட்சியினரை, நாட்டின் அமைதியை விரும்பும் மக்கள் பாராட்டுவர்.

மாவட்டசபைமசோதா சர்ச்சைக்கிடமான ஒரு பிரச்னையாக வளர்த்து விடப்பட்டிருக்கிறது. மாவட்டசபை மசோதா கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுமே அது ஓர் அரசியல் நெருக்கடியாக உருவாகுமென்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். தமிழர்களுக்கு எல்லா உரிமைகளையும் மாவட்ட சபைகள் அள்ளிக்கொடுத்துவிடும் என்பதாலோ, சிங்கள மக்களின் உரிமைகளை அழித்துவிடுமென்பதாலோ, அந்த மசோதா அரசியல் நெருக்கடியை உருவாக்குமென எதிர்பார்க்கப்பட்டதல்ல. அரசியல் ஆதிக்கப்போட்டியும் அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கும், முன்னைய சம்பவங்களுக்குப் பழிவாங்கும் மனப்பான்மையுமே இந்த மசோதா நெருக்கடியைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்பட்டதற்குக் காரணமாகும்.

மாவட்டசபைமசோதா பற்றிய விபரங்கள் இன்னும் சரியாகத் தெரியவில்லை. கிராமசபைகளுக்குள்ள அதிகாரங்கள் கூட மாவட்டசபைகளுக்கு இருக்காது என்று பிரதமர் கூறிவருகிறார். மாவட்டசபைகள் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் அமைக்க உத்தேசிக்கப்படவில்லை. இலங்கை முழுவதிலும் இச்சபைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கின்றன. தமிழர் வாழும் இரண்டு மாகாணங்களில் மாவட்ட சபைகளால் கிடைக்கக் கூடிய நன்மைகளைவிட சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் இதர ஏழு மாகாணங்களில் தான் அதிக நன்மை கிடைக்க முடியும்.

மாவட்டசபைகள் வேண்டுமென்ற கோரிக்கை எப்பொழுது, ஏன் எழுந்தது? இந்த நாட்டுக்கு கிடைத்த சுதந்திரம் இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையினத்தவருக்கு மட்டும்தான் உரியதென்ற மனப்பான்மையில், இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிக்கக்கூடிய பாரபட்சமான வகுப்புவாத அடிப்படையில் சட்டங்கள் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டதுடனும் நிர்வாக ரீதியிலும் இதேபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும் தான் ஒரு பகுதியிலாவது நிம்மதியாக வாழமுடியாதா என்ற நப்பாசையில்தான் மாவட்டசபைக் கோரிக்கை எழுந்தது. துரதிர்ஷ்டவசமாக இதுபற்றித் தமிழ்பேசும் மக்களுக்குள்ளேயே வேறுபட்ட அபிப்பிராயம் நிலவுகிறது. தென்னிலங்கையில் இரு பெரும் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஏற்படும் அரசியல் போட்டியால் சிறுபான்மையினருக்கும் நாட்டுக்கும் ஏற்படக்கூடிய ஆபத்தை விடச் சிறுபான்மையினரின் உரிமைகளுக்காகச் சிறுபான்மை மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியல் ஸ்தாபனங்களுக்கிடையில் ஏற்படும் போட்டியும், குரோதமும் வேறுபாடும் பேராபத்தானது என்பது கடந்தகால சம்பவங்களிலிருந்து அனுபவரீதியாகக் கண்ட உண்மை; சிறுபான்மையினருக்குக் குறிப்பாகத் தமிழ்பேசும் மக்களுக்கு ஓரளவாவது பாதுகாப்பளிக்க உதவும் என்ற நம்பிக்கையுடன் விடுக்கப்பட்ட மாவட்டசபைக் கோரிக்கையைக் கூடப் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் கொடுக்க விரும்பவில்லையென்ருல், சிறுபான்மையினர் பெரும்பான்மையினருடன் எத்தனை காலம் நாட்டுக்காக ஒத்துழைப்பர்! தேசிய ஐக்கியம் தான் எப்படி நிலைபெற முடியும்?

பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நல்லவர்; நேர்மையானவர். மாவட்டசபை மசோதா கொண்டுவருவதாக அவர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிருர். மாவட்டசபை நல்லதா கூடாதா என்பது வேறு விஷயம்; கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது வேறு விஷயம். எதிர்க்கட்சியினரின் எதிர்ப்புக்கு அஞ்சியும், தமது கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமலும் தம்மை நம்பிய தமிழரசுக் கட்சியினரை ஆறுதலாக இருக்கச்செய்வது ராஜதந்திரமானுலும் பாராட்டக்கூடியதல்ல. நல்லவராக இருப்பதுடன் வல்லவராகவும் பிரதமர் இருக்கவேண்டும்.

# பூநகரி மகாதேவாபாலத்தை உடனடியாக கட்ட தீர்மானம்

## கிளிநொச்சி எம். பி. முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

பூநகரி மகாதேவாப் பாலத்தை உடனடியாக கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமொன்று எதிர்வரும் யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கின்றது.

அடுத்த மாவட்ட இணைப்புக்குழுக்கூட்டம் இம்மாதம் 28-ம் திகதி அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா தலைமையில் நடைபெறும்.

பூநகரிமகாதேவாப்பாலம் பற்றிய இத்தீர்மானத்தை இணைப்புக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்ற வடபகுதி எம். பி.க்கள் பலரும் முன்னறிவிப்புக்கள் கொடுத்துள்ளனர். கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் இப்பிரேரணையை இங்கு கொண்டுவருவார்.

சங்குப்பிட்டியிலிருந்துபூநகரிவரையுள்ள சுமார் அரை மைல் நீளமான கடலில் பாலமமைக்க பொதுவேலைப் பகுதி அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரம கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் அத்திபாரக் கல்லை நாட்டியிருந்தார். இதற்காக ரூபா மூன்றரைலட்சம் ஒதுக்கியிருந்தும் இன்னமும் இதற்கான கட்டடவேலைகள் எதுவும் ஆரம்பமாகாதது பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை உண்டு பண்ணியுள்ளது.

பூநகரி மகாதேவாப் பாலத்தை அமைப்பதால் ஆனையிறவு உப்பளத்திலும், யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்படவிருக்கும் உப்பளத்திலது உற்பத்தியும் பாதிக்கப்படலாமென இங்கு வந்திருந்த பிரெஞ்சு உப்பு உற்பத்தி நிபுணர்கள் தெரிவித்திருந்தார்கள். இதுபற்றிய அறிக்கை சமர்ப்பித்த நீர்ப்பாசனத் திணைக்கள உயிரியல் பொறியியலாளர்களையும், உப்புக்கூட்டுத் தாபன பொறியியலாளர்களையும் அழைத்து ஒரு மகாநாடு நடத்துமாறு அமைச்சர் மொண்டேகு ஜெயவிக்கிரமவை கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் நேற்றுக்காலை கேட்டுக் கொண்டார்.

இதற்குச் சம்மதமளித்த அமைச்சர் இம்மகாநாட்டை

அடுத்தமாத முற்பகுதியில் கூட்டுவதாகவும் திரு. கா. பொ. இரத்தினத்திடம் உறுதியளித்ததாகத் தெரிகின்றது. (கா. நி.)

## கதை அரங்கு மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்ற இலக்கியக் குழுவினரால் நாளை நடாத்தப்படவிருந்த குழுவின் இம்மாத நிகழ்ச்சியான கதை அரங்கு இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனுல் ஜூன் மாத நிகழ்ச்சியான ஓரங்க நாடக அரங்கும் ஒத்திவைக்கப்படுமெனத் தெரியவருகிறது.

## சேவைநலம் பாராட்டு

அளவெட்டி, வியாழன்

யாழ்ப்பாணம் ஐக்கிய மாகாண வங்கியில் பல ஆண்டுகளாகப் பணப்பொறுப்பாளராகக் கடமையாற்றி ஒய்வுபெற்ற திரு. க. செல்லத்துரைக்கு பிரியாவிடையொன்று அளிக்கப்பட்டது. மேற்படி வங்கி உத்தியோகத்தர் ஐக்கிய நாணய சங்கத்தினரால் இவ்வைபவம் நடாத்தப்பட்டது. திரு. செல்லத்துரை பிரஸ்தாப சங்கத்தின் தனாதிகாரியாகக் கடமையாற்றினர். வைபவத்துக்கு திரு. இ. சபாநாதன் தலைமை வகித்தார். முன்னைநாள் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. ஆர். சி. குக் உட்பட பலர் திரு. செல்லத்துரையின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

3 மாதமாகியும்

# ‘மாருதப்புரவி’யையும் ‘அமராவதி’யையும் கடலில் காணவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதிக் கடல்களில் நடைபெறும் இயந்திரப்படகுச் சேவை பற்றிய பல புகார்கள் அரசாங்க அதிபருக்குக் கிடைத்துள்ளன. அரசாங்கத்துக்குச் சொந்தமான இங்குள்ள 7 இயந்திரப் படகுகளும் பழுதடைந்த நிலையில் இருப்பதே இதற்குக் காரணமாம்.

இங்கு சேவையிலீடுபட்டிருக்கும் அரசாங்கத்திற்குச் சொந்தமான இரு இயந்திரப் படகுகள்கூட கடந்த இரு மாதகாலமாக பழுதடைந்தும்இன்னமும் திருத்தப்படவில்லையாம். இதனுல் அரசாங்க ஊழியர்கள் கூட தமது கடமைகளைச் செய்ய இயந்திரப்படகில்லாத ஒரு நிலை இங்கு ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பகுதியில் சேவையிலீடுபட்டிருந்த பொதுவேலைப் பகுதிச்சொந்தமான படகொன்றிற்கு என்ன நேர்ந்தது என இங்குள்ள பிரயாணிகள் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர். இதுதவிர நயினுதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவுப் பகுதி படகுச் சேவைகள் அடிக்கடி இயந்திரக் கோளாறினுல் விதம்பிதம் அடைவதாகவும் அரசாங்க அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஊர்காவற்றுறைப் பகுதியில் சேவையிலிருக்கும்

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரசவ வார்ட்டில் இடநெருக்கடி

கொழும்பு, வியாழன்

கர்ப்பிணிகள் பிரசவ காலத்திற்கு ஒரு மாதங்களுக்கு முன்னரே ஆஸ்பத்திரியில் உள்ள பிரசவ வார்ட்டில் சேர்வதால் அங்கு இடநெருக்கடி ஏற்படுவதாக சுகாதார மந்திரி திரு. ஈ. எல். சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

விசேஷ கவனம் தேவைப்படும் கர்ப்பிணிகள்மட்டுமே பிரசவ திகதிக்குமுன்னர் சேர்க்கப்பட வேண்டுமென்றும் அவர் கூறினுர்.

# “வழிபாட்டுச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது”

## ஆலய தர்மகர்த்தாக்கள் சபை பிரதமருக்கு மகஜர்

அளவெட்டி, வியாழன்

“ஆலயப் பிரவேசத்தைச் சைவப் பற்றுள்ள சிறுபான்மைத் தமிழர்கள் விரும்பவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், நாஸ்திகர்களும், அரசியல்வாதிகளுமே இதனை விரும்பி நிற்கிருர்கள்” என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுக்கு அகில இலங்கை ஆலய தர்மகர்த்தாக்கள் சபை அனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

200 தர்மகர்த்தாக்கள் கையெழுத்திட்டுள்ள இம்மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: “சமூகக் குறைபாட்டுத் தடைச் சட்டத்தின் அம்சங்களை இங்குள்ள அரசாங்க அதிபர்கள் செயற்படுத்துமிடத்து [illegible] சிறுபான்மைத் தமிழரை ஆலயங்களுக்குள் அனுமதிக்கும்படி கட்டளையிடுவதால், வடஇலங்கையிலுள்ள சைவ மக்களிடையே ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. இச்சட்டத்தின் மூலம் எங்கள் அடிப்படை உரிமையாகிய வழிபாட்டுச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனுல் அநேக கோவில்களில் நித்திய பூசைகளும் ஏனைய சமயக் கிரியைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. அதன் பயனுச் சைவ மக்களிடையே நாத்திகத்துக்கு வழிகோலப்படுகிறது.

வட மாகாணத்திலுள்ள ஆலயங்கள் பொதுசன ஆலயங்கள் அல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிருேம். இந்தியாவில் உள்ளவற்றைப்போல பழைய அரசர்களால் கட்டப்பட்டவையல்ல. அரசாங்க நிதியிலிருந்து கட்டப்பட்டனவுமல்ல,

சிறுபான்மைத் தமிழர்களுக்கு அவர்தம் வணக்கத்துக்கென அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயங்கள் உண்டு. சாதி என்பது சமுதாயத்துறை. அதை ஆத்மீகத்துறையுடன் கலக்கக் கூடாது.

சட்டம் இயற்று முன் இம்முக்கிய விஷயத்தில் சைவமக்களிடையே அபிப்பிராயங்களை அறிவதற்கு ஒரு விசாரணைக்குழு நியமிக்கப்படவில்லை காலஞ்சென்ற டி. எஸ். சேனநாயக்கா சமய விஷயத்தில் யாராலுமன்றம் தலையிடக்கூடாதென்றும், அது குருமாரிடமே விடப்படவேண்டுமென்றும் அன்று கருதினுர்.

சமூகக் குறைபாட்டுச் சட்டத்திலிருந்து சைவ சமயம், கோவில்கள், வணக்கத்துரிய இடங்கள் முதலியன பற்றிய வாவற்றையும் நீக்குவதற்குத் தாங்கள் முயற்சி எடுத்து அதை நிறைவேற்றவேண்டும். அதுவரையும் அரசாங்கமும், பொலிசாரும் சிறுபான்மைத் தமிழரை ஆலயங்களில் உட்செல்ல நடவடிக்கை எடுக்காது இருக்கும்படியும் உத்தரவிட வேண்டும்”.

## ஞானசம்பந்தர் குருபூசை

கோப்பாய், வி

கோப்பாய் திருவருள் நெறி மன்றத்தாரால் வ ஜூன் மாதம் 11-ந் தி திருஞானசம்பந்த மூர் நாயனர் குருபூஜை சிற கக் கொண்டாடப்பட கிறது, அன்று பசிசவ விழாவையும் நடத் தற்கு ஏற்பாடுகள் செ படுகின்றன.

## ஜூன் 13-ல் கி. ச. தேர்த

வவுனியா, வி

வவுனியா கிழக்கு தெற்கு தமிழ்ப்பகுதி கி சபையின் தேர்தல் அ மாதம் 13-ந் திகதி பெறவிருக்கிறது. 14 டாரங்களைக்கொண்ட கிராமசபையில் 8 வ ரத்திற்கு அங்கத்தவ போட்டியின்றி தெரிவு யப்பட்டுள்ளனர். மீ வட்டாரத்துக்கே தே நடைபெறவுள்ளது.

## இன்றைய பல

[24 - 5 - 68]

வைகாசி மீ 11 வ

வெள்ளிக்கிழமை

திதி - அமாவாசை. 7-34 மேல் திரயோ

நட்சத்திரம் - அ வினி இரவு 2-48 பரணி.

ராகுகாலம் - 10-2 11-52.

சுபநேரம் - 5-5 7-22.

இன்று பிறந்த களுக்கு காதலர் ஜாக்கிரதை! கா கொடுக்கும் பகைவர் பக்கத்திலே உண்டு. வாசப் பயணமொ முடிவில் உபத்திர தைக் கொடுக்கும். உ நிலை பாதிக்கும். த பாதுகாப்பு வேண் அலுவலகத்தில் மே காரிகளின் ஆத கிடைக்கும். சில உத்தியோக உயர் உண்டு. நீண்ட பய துக்குத் திட்டமிடு கள். ஆனுல் இ பிறந்த ஆண்டு அ துவை கடுவது கடின

மேஷம்- அடி சறுக் ஆணவத்தை அடக்கு

ரிஷபம்- திடீர் பம், திரவிய இலாப

மிதுனம்- என்ன தடை, இனத்தில் பூ

கடகம்- அன்னை அமிர்தம், அமைதியு இரு.

சிம்மம்- அறவழி டம், அன்பர்கள் வரு

கன்னி- பாதை தடை, பார்த்து நட.

துலாம்- இரு ம கலக்கும், இனிமை பிறக்கும்.

விருச்சிகம்- ப வாழாகும், பக்கு வேண்டும்.

தனுசு- உதவும் ணம், உள்ளத்தில் உ

மகரம்- மக்கள் ரவு, மதிப்பும் உயரு

கும்பம்- முதி அறிவுரை, முயற்சி தம்.

மீனம்- பிடி வா வேண்டாம், பின் வ நேரிடும்.

— சோதிடக்கலாநி

திருமலை வேலுப்பிள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இளந்தமிழர்படை காங்கிரஸ் மகாநாட்டில் நிறுவப்படுமாம்

யாழ்ப்பாணம், வியா. தமிழ்க்காங்கிரஸ் வருடாந்த மகாநாட்டில் இளந்தமிழர்படை தொகுதிவாரியாக நிறுவப்படவிருக்கிறது. தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி இப்படையை நிறுவுவதற்கு தலைமைப் பீடத்திடம் அனுமதி கோரியுள்ளது.

அடுத்த மாதம் 9-ம் திகதி நடைபெறவிருக்கும் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி பொதுச்சபைக் கூட்டத்தில் இளந்தமிழர் படை நிறுவுவதுபற்றி இறுதிமுடிவு செய்யப்பட்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் வருடாந்த மகாநாட்டில் இப்படை நிறுவப்படுமாம்.

தொகுதி அபிவிருத்தி, கட்சிவளர்ச்சி, தமிழ் உரிமைபாதுகாப்பு ஆகிய வற்றில் இப்படை கவனம் செலுத்துமாம்.

பாவனைப்பொருள் கட்டுப்பாட்டு சட்டத்திற்கு எதிராக கரையோரப் பகுதிகளில் பிரசாரம் செய்வதற்கும் இப்படை பயன்படுத்தப்படுமாம்.

வாலிபமுன்னணி பொதுச்சபை கூட்டத்தில் வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் இளந்தமிழர் படை பற்றி விளக்கிக் கூறுவார் என்று வாலிப முன்னணிப் பிரமுகர் ஒருவர் சொன்னார்.

# 'அடிப்படைக் கல்விகூட புகட்ட முடியவில்லை'

## இன்றைய ஆசிரியர் நிலைபற்றி கவலை

யாழ்ப்பாணம், வெள்ளி "பாடசாலைகளின் தேவைக்கேற்ப ஆசிரியர்களோ, போதிய கட்டட வசதியோ இல்லாத நிலையில் அடிப்படைக் கல்வியைத் தன்னும் மாணவர்களுக்குப் புகட்ட முடியாத நிலையில் ஆசிரியர்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்'.

இவ்வாறு யாழ்ப்பாணப் பட்டின ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய ஆசிரியர் திரு. எஸ். கார்த்திகேசு ஜே. பி. குறிப்பிட்டார்.

திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

'ஆசிரியர்கள் திருப்திகரமான சேவை நிபந்தனைகளின்றி இன்று பல கஷ்டங்களுக்கிடையே தொழில் ஆற்ற வேண்டியிருக்கின்றது. எமது குறைகளை முறையாக எடுத்துக் கூறுவதற்குக் கூட வசதியற்ற நிலையில் இன்று ஆசிரியர் சமுகம் அல்லல் படுகின்றது. எமது கஷ்டங்களை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு காணுவதன் மூலம் நாட்டின் கல்வி நிலையை சிர்பெறச் செய்வதற்கு அரசாங்கம் முன்வரல் வேண்டும்.'

திரு. ரி. சேனுதிராஜா பேசுகையில் ஆசிரிய பிரச்சினைகளைத் தீர்க்க ஆசிரியர் சங்கங்கள் பிளவுபட்டு நிற்காது இனியாவது ஒன்றுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

புதிய நிர்வாகிகள் தெரிவில் திரு. ரி. சேனுதிராஜா தலைவராகவும், திருவாளர்கள் எஸ். பி. நடராஜா, எம். பாஸ்கரன் ஆகியோர் உப தலைவர்களாகவும், திரு. எஸ். பரமானந்தம் செயலாளராகவும், திரு. கே. கதிர்காமத்தம்பி உபசெயலாளராகவும், திரு. பி சண்முகராஜா பொருளாளராகவும், திரு. எஸ். நம்பியாரூரன் கணக்குப் பரிசோதகராகவும் தெரியப்பட்டனர்.

[கா. நி]

### மஹோற்சவம்

கோப்பாய். வியாழன் கோப்பாய் தெற்கு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஆரம்பமாகிறது. எதிர்வரும் ஜூன் 8-ந் திகதி இரதோற்சவமும் 9-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

### பண்டத்தரிப்பில் சுகாதாரவாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி பண்டத்தரிப்பில்சுகாதார வாரத்தைக் கொண்டாடுவதற்காக பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் வண. எஸ். பி. விஜயரட்ணம், உபதலைவர் திருமதி பீ. இரத்தினவேல், இணைச் செயலாளர்கள் சி. வி. ஈ. நவரட்ணசிங்கம், என். சபாநாதன், தனாதிகாரி சி. எப். செல்லத்துரை. 10 பேர் கொண்ட நிர்வாகசபை பொன்றும் தெரியப்பட்டது. (க. நி.)

### புதிய தலைவர்

ஊர்காவற்றுறை, வியாழன் மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியின் புதிய தலைவராக திரு. சம்பந்தமூர்த்தி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இச்சங்கத்தின் 30-வது வருடாந்தக் கூட்டம் சமீபத்தில் காரைநகரில் நடைபெற்றபோது இத்தெரிவு நடைபெற்றது.

கொட்டடியில் நிறுவப்பட்ட பிரஸ்தாப ஆஸ்பத்திரியின் கிளையை மூடுவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### முத்திரையின்றி விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், வெள்ளி வடபகுதியில் பாவனைப் பொருள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ்கூடுதலான பொருட்களை வைத்திருக்க விரும்புபவர்கள் 5 ரூபா முத்திரை இல்லாமலே விண்ணப்பிக்கலாம். இதனை யாழ்ப்பாண மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எம். வீரசிங்கம் நேற்று அறிவித்தார்.

(ா. நி)

### கோவிலில் திருட்டு?

ஊர்காவற்றுறை, வியா. வேலணையைச் சேர்ந்த சாட்டி மாதா கோவிலுக்குரிய முடியும், சங்கிலியும் திருடப்பட்டுவிட்டதாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் புலன் விசாரணை செய்கின்றனர்.

# கலாநிதி காட்டும் நன்னெறி

'இந்நாட்டு மக்கள் எல்லோரும் சிங்களமொழி ஒன்றையே பயிலவேண்டும் என்று கூறுவது முதல்தரமான பைத்தியகாரத்தனம்' என்று தேசிய உயர்தரக்கல்வி சபையின்தலைவர் கலாநிதி ஜி. பி. மலலசேகரா ரத்தினபுரி பாடசாலை ஒன்றின் பரிசளிப்பு விழாவில் கூறியுள்ளார்.

கலாநிதி அவர்கள் கூறுவது முதல்தரமான முட்டாள்தனம் என்று சிலர் நிச்சயமாக நம்புவார்கள். ஏனெனில் இச்சிலர் அரசியல்வாதிகள், கலாநிதி அரசியல்வாதியல்ல.

இன்னொரு வித்தியாசம். மலலசேகரா கல்வித்துறையில் பாண்டித்தியம் பெற்றவர். சிங்களம். ஆங்கிலம், பாளி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளைக் கற்றவர். இப்பொழுது தமிழும் பயிலுகின்றார் என்று கேள்வி. இவைமட்டுமல்லாமல், இலங்கையின் தூதுவராக பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளில் பலவருடங்களாகக் கடமையாற்றி நிரம்பிய உலக அனுபவமும் பரந்த நோக்கும். விரிந்த பண்பாடும் வரப்பெற்றவர்.

இத்தகைய தராதரமுள்ள இலங்கையரை அரசியல் வாதிகளிடம்காண்பது அரிதினும் அரிது.

கலாநிதி மலாலசேகரா மேலும் கூறியுள்ளார்: 'ஒருவருடைய இனம், மொழி, மதம் என்ற கூடுகளுக்குள் முடங்கிக்கிடக்கும் தற்காலத்து நிலை மாறவேண்டும். அப்பொழுதுதான் பிறரையும் தன்னைப்போல நேசிக்கும் தன்மை ஏற்படும். தாய்மொழியை மட்டுமே கற்பதால் நாமோ நமது நாடோ முன்னேற முடியாது . . . ஸ்ரீபாதம் (சிவனொளி பாதம்) மலையைப் போல, இந்நாடும், இங்கு வசிக்கும் எல்லா வித மக்களுக்கும் சொந்தமானது. இப்பாடசாலையின் நடவடிக்கைகள் யாவும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடத்தப்படுவதுபற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த முறை வெகு விரைவில் இலங்கை முழுவதிலும் பின்பற்றப்பட வேண்டுமென்று நம்புகிறேன்."

பாரபட்சமில்லாத முறையில் இந்நாட்டின் ஐக்கியத்திலும் முன்னேற்றத்திலும் உண்மையான அக்கறையுள்ள பண்பாளர் எல்லோரும் கலாநிதி மலலசேகராவின் கருத்துக்களை பரிபூரணமாக வரவேற்பார்கள் என்பது நிச்சயம். ஆனால் மொழி வெறி, இன வெறி, மதவெறி முதலியவற்றைத் தூண்டிவிட்டு, பாமரப் பொது மக்களிடையே துவேஷக் கனலைக் கிளப்பி அதன்மூலம் தங்கள் சொந்த நலன்களைப் பாதுகாத்து அதிகார பீடங்களில் வேரூன்றியிருக்க விரும்புகிறவர்களுக்கு அவருடைய கருத்துரை நாராசமாய் இருக்கும்.

சேர் பொன்னம்பலம் சகோதரர்கள், சேர் ஜேம்ஸ் பீரிஸ், சேர் எம். ரி. அக்பர் போன்ற முன் வாழ்ந்த தலைவர்கள் குறுகிய பாகுபாடுகளில்லாத ஓர் இலங்கை சமுதாயத்தை அமைக்கப் பாடுபட்டார்கள். இம்முயற்சிகளை அக்காலத்தில் அரசு புரிந்த ஆங்கிலேயர் தமது 'பிரித்தாளும்' கொள்கையினால் அவ்வப்போது தடுத்துக் கொண்டே வந்தனர்.

சுதந்திரம் அடைந்த பின்னர் வகுப்புவாதமும்மொழி பேதமும் மத வேற்றுமையையும் ஆங்காங்கே எழுந்த போதிலும் தேசிய ஒற்றுமையின் அவசியத்தை கலாநிதி மலலசேகரா போன்றோர் நாளுக்கு நாள் உணர்ந்து வருகின்றனர். தமிழ், சிங்கள, முஸ்லிம் சமுதாயங்களிடையே பல மலலசேகராக்கள் தோன்றினால் இலங்கைக்கு மிக விரைவில் விமோசனம் கிடைக்கும்.

—வழிப்போக்கன்

### நாட்டிலும் நகரிலும்

# உதவித்தளபதி, உதவிபொலிஸ் அதிபர் நாளை வருகின்றனர்

யாழ்ப்பாணம், வெள்ளி வடபகுதிக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொள்ளும்இராணுவத் தளபதி திரு சேபால அட்டிக்கலே 'நாளை காலை விசேஷ விமானத்தில் பலாலிவிமான நிலையத்தை வந்தடைவார். உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு ஈலியன் பெர்ணாண்டோ நாளைமாலை 4 மணிக்கு விமானத்திலே பலாலியை வந்தடைவார்.

திரு சேபால அட்டிகலே தலைமையில் நாளை மாலை சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுத்தல் பற்று உயர்தர மகா நாடொன்று காங்கேசன்துறையில் நடைபெறும். இராணுவ, கடற்படை பொலிஸ்பகுதி உயர்தர அதிகாரிகள் இம்மகாநாட்டில் கலந்து கொள்வார்.

25ம் திகதி காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்டேடியம் மைதானத்தில் நடைபெறும் பொலிசாரின் அணிவகுப்பு மரியாதையை உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஈலியன் பெர்ணண்டோ ஏற்றுக்கொள்வார் அதனைத் தொடர்ந்து பொலிசாரின் வீதிபவனி, கன்னன் கோஷ்டியினதும், இரட்டையர் குழுவினதும் வாத்திய இசையுடன் யாழ் நகர் வீதிகளில் அணி வகுத்து செல்லும்.

இரண்டுநாள் விஜயத்தை முடித்த பின்னர் திரு சேபால அட்டிக்கலேயும்திரு ஈலியன் பெர்ணண்டோவும் 26.ம் திகதி இரவு விமானத்தில் கொழும்பு திரும்புவார்கள். [கா. நி]

### அரபு போட்டியில் பரிசு பெறுவோர்

கொழும்பு, வியாழன் இஸ்லாமிய அரபு இலக்கியக் குழுவினால் நடத்தப்பட்ட 1968-ம் வருட அரபுப் போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

21 வயதுக்குட்பட்டோர் செல்வி பரீதா கல்பிக்கார், ஜூனைட், [முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி கல்எலியா செல்வி ஆல்மா அஹ்மட், [முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கல்எலியா]

செல்வி சரீன் மஹீஹா றஹீம், (முஸ்லிம் மகளிர் அரபுக்கல்லூரி கல்எலியா]

21 வயதுக்கு மேற்பட்டோர். திரு ஏ. எல். எம் இப்றுஹிம் [ஏ 22, உயன்வத்தை பரவகம] திரு ஓ. எல். எம், இப்றுஹிம் [அல் மன்னூர் மகா வித்தியாலயம் ஹற்தெஸ்ஸ] திரு அகமது லெவ்வை மிகம்மது ஹாசிம் [கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி, அட்டாளைச்சேனை 4.

பேச்சுப் போட்டி: செல்வி சரீன் மஹீஹா றஹீம், [முலிம் மகளிர் அரபுக் கல்லூரி கல்எலியா] செல்வி பரீதா கல்பிக்கார் ஜூனைட் [முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கல் எலியா] செல்வன் எம். எம். தீன் மொஹமட். [கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி, அட்டாளைச்சேனை]

பரிசளிப்புவிழா அடுத்த மாதம் 2ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கொழும்புக் கோட்டையிலுள்ள சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தில் நடைபெறும்.

### பழைய மாணவர் சங்க உறுப்பினர்

ஊர்காவற்றுறை, வியா. வேலணை மத்திய மகாவித்யாலய பழைய மாணவர் சங்கக்கூட்டம் அதிபர் திரு. எஸ். அரியரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

கட்டிடங்கள் அமைத்தல், விஞ்ஞான ஆய்வுகூடம் நிறுவுதல் என்பனபற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. திரு. பி. கேதாரநாதன், திரு. கே. நாகராசா, திரு. எஸ். வரலிங்கம் ஆகியோர் கல்லூரியின் வளர்ச்சிபற்றிக் கருத்துரைகள் நிகழ்த்தினர் 'விஞ்ஞான ஆய்வு கூடம்' நிறுவுவதற்கு நிதி திரட்டுவதெனவும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர்: திரு. ஜே. எஸ். அரியரத்தினம் [கல்லூரி அதிபர்], உபதலைவர்கள்: திரு. கே. கோபாலபிள்ளை, திரு. எஸ். கோபாலபிள்ளை. காரியதரிசி: திரு. க. சண்முகநாதன், தனாதிகாரி: திரு, பொ. கேதாரநாதன் நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

### ஊழியர்கள் சங்கடம்

சங்கானை, வியாழன் கொழும்பில் உள்ள சௌக்கியப் பிரிவின் மருந்து விநியோகப் பகுதியிலிருந்து யாழ். மாவட்டப் பகுதிக்கு அனுப்பப்படும் மருந்துப் பொதிகள் டப்பாக்கள் போன்றவைகளை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லையாம். அவைகளில் பொறிக்கப்பட்டுள்ள லேபல்கள் தனிச் சிங்களத்தில் இருப்பதால் இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் அவற்றினுள் என்னென்ன மருந்துகள் இருக்கின்றன என்று புரிந்துகொள்ள முடியாத நிலையில் திண்டாடுகின்றனராம்.

அண்மையில் இதுபோன்ற சம்பவம் ஒன்று சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் நிகழ்ந்துள்ளது எனவும் அறியப்படுகிறது.

### தந்திக் கம்பி களவு

சுழிபுரம், வியாழன் வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள தந்திக்கம்பிகள் அடிக்கடி திருடப்படப்படுகின்றனவாம். கடந்த சில தினங்களாக நடைபெறும் இவ்வித சம்பவங்களால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றனர். தபால் தந்திப் பகுதியினர் அறுந்த கம்பிகளை இணைப்பதிலும், பிழைகளைத் திருத்துவதில் கவனம் செலுத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரல்லாத

# கல்லூரி உத்தியோகஸ்தர்கள் மகாநாட்டுக்குவரும் தீர்மானம்

புன்னாலைக்கட்டுவன், வியாழ

இம்மாதம் 25-ம் திகதி கொழும்பு ஆனந்தாக்கல்லூரியில் நடக்கவிருக்கும் அகில இலங்கை அரசினர் பொறுப்பேற்ற பாடசாலைகளின் ஆசிரியரல்லாத உத்தியோகத்தர் சங்க வருடாந்த மகாநாட்டில் வடபகுதிக் கிளைச் சங்கம் அங்கத்தவரின் பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டவிருக்கிறது.

வருடாந்தப்படி உயர்வு தரப்படல் வேண்டுமென்றும், நிரந்தர நியமனம் வேண்டுமென்றும், சைக்கிள் வாங்க முற்பணம் வேண்டுமென்றும், குடும்பத்துடன் எங்கும் சென்று வர புகைவண்டி இலவசச் சீட்டுகள் வழங்க வேண்டுமென்றும், அவரவர் தராதரத்திற்கு ஏற்ப வேலைகள் தரப்படல் வேண்டுமென்றும் கோரும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்படவிருக்கிறது. பிரதம விருந்தினராகக் கல்வி அமைச்சர் திரு. இரியகொல்லை கலந்து கொள்ளும் இம்மகாநாட்டில் தொழில் அமைச்சர் திரு. எம். எச். முகமது நிதி உதவி அமைச்சர் திரு. என். விமலசேன ஆகியோரும் உரைநிகழ்த்துவர்.

## 24பேர் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி

சட்டவிரோதமாகச் சூதாடியதென்ற சந்தேகத்தின் பேரில் 24 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

யாழ்ப்பாண நகரிலுள்ள மேல்மாடிக் கட்டடமொன்றில்பொலிஸ்சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசிங்கா தலைமையில் நேற்று முன்தினம் நள்ளிரவு பொலிஸ் கோஷ்டியொன்று திடீர் சோதனை செய்த போதே இவர்கள் சூதாட்டத்தில் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டதாம்.

கைது செய்யப்பட்ட 24 பேரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். [ஈா. நி]

## "மத்திய குழு ஆராயவேண்டும்"

கொழும்பு, வியாழன்

மாவட்டசபை மசோதாவினால் மலைநாட்டுத் தமிழருக்கு நன்மையா? தீமையா? என்பதுபற்றி மத்தியகுழு ஆராய்ந்து முடிவு செய்யவேண்டுமென்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பூண்டுலோயாமாவட்டத்தலைவர் திரு. எஸ். நடேசன் கூறியுள்ளார்.

## சட்ட ஆலோசனை சபை நிறுவப்படும்

அளவெட்டி வியாழன்

உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்க சபைகள் நிறுவப்பட விருக்கின்றன.

உள்ளூர் ஆட்சிமன்றங்களான மாநகரசபை நகரசபை பட்டினசபை கிராமசபை ஆகியவற்றில் ஏற்படும் சட்டப்பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்காகவே உள்ளூராட்சி அமைச்சு இச் சட்ட ஆலோசனைச் சபையை நிறுவ இருப்பதாகத் தெரியவருகிறது.

மேற்படி சபைகளுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவதற்காகவே இச்சபை நிறுவப்பட இருக்கிறது என்றும் இச்சபை நிறுவுவதற்கு சம்மதத்தைத் தெரிவிக்கும்படியும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உள்ளூராட்சி அமைச்சால் அனுப்பப்பட்டுள்ள ஒரு சுற்றுநிருபம் தெரிவிக்கின்றது.

## கண்டனக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

பரவலைப்பொருள் கட்டுப்பாட்டு திட்டம், மாவட்ட சபை மசோதா ஆகியவற்றை எதிர்த்து அடுத்த மாதம் வடபகுதியில் மூன்று பிரசாரக்கூட்டங்களை நடாத்த தமிழ்க்காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

அடுத்தமாதம் 9-ந் தேதி வல்வெட்டித்துறையிலும், 10-ந்தேதி உசனிலும். 11-ந் தேதி காரைநகரிலும் இக் கூட்டங்கள் நடைபெறுமாம்.

## வீதி ஓரத்தில் ஒரு சடலம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வீதிஓரத்தில் இறந்துகிடந்தார் 35 வயது நபர் ஒருவர். மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணக்கரையூரைச் சேர்ந்த அந்தோனி சின்னப்பு என்பவரே இறந்து கிடந்தவராவர். கரையூர் பொதுவேலைப்பகுதி 'ஜெட்டி'க்கு அருகாமையில் நேற்றுக்காலை இவர் இறந்து கிடக்கக் காணப்பட்டதாக மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. என், இராசநாயகம் சாட்சியங்களைப பதிவு செய்த பின்னர் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். கரையூர் பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர். [ஈா. நி.]

## மீண்டும் நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த கோப்பாய் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு, பெரேரா மீண்டும் பதவியிலமர்த்தப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் முதல் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றுகின்றார். [ஈா, நி.]

## மாவட்டசபை பற்றி பஸநாயகா

தெலியாவல, வியாழன்

உத்தேச மாவட்டசபை மசோதாவை அரசாங்கம் கொண்டுவருவதால் சிங்கள சமுதாயத்திற்குபெருந் தீங்குவிளையுமாதலால் இம் மசோதாவை பாராளுமன்றத்தில் கொண்டுவரக் கூடாது.

வித்தியாதிலக பல்கலைக் கழக பிரிவினையில் முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஸநாயகா பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மகா சங்கம் பலத்தஎதிர்ப்புத் தெரிவித்ததால் காலஞ்சென்ற பண்டாரநாயகா 1956-ம் ஆண்டு பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தத்தை மக்கள் அபிப்பிராயத்திற்கு மதிப்புகொடுத்து கிழித்தெறிந்தார்.

நாட்டுப்பற்றுள்ள எல்லா மக்களும் மாவட்டசபை மசோதாவிற்கு எதிராக வாக்களிக்கும்படி தங்கள் எம். பியிடம் கோரவேண்டும். மாவட்டசபை வந்தால் வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ள சிங்கள மக்கள் உரிமைகளை இழப்பார்களென்று சிங்கள மக்கள் அச்சமடைகிறார்கள். நாட்டைத் துண்டாக்கும் இந்நிலையை எவரும் விரும்பமாட்டார்கள்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 24-5-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

844 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை — எம். வைரவப்பிள்ளை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 திருப்பாடல்கள், 7-30 பண்ணாரிந்தமிழ் — சாந்தாவதி தேவநாயகம், 8-00 இஸ்லாமியநிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

844 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை

844 மீற்றர் அல் 61 மீற்றர்

இரவு 6-15 பஜனை, 6-45 பாவனம், 7-00 கிராமசஞ்சிகை. 7-30 முத்திநெறி — சைவசஞ்சிகை — செல்வி சற்சொருபவதிநாதன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 பாட்டு— லீலா துரைசிங்கம்.




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்
AGENTS
ரேயல் டிஸ்பென்ஸறி
PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி திருவினை ஆக்கும்

## முயன்று முயன்று பாருங்கள்





தேசீய லொத்தர்ச் சீட்டுகளை இன்றே வாங்கிக் கொள்ளுங்கள் முயற்சிக்கு அதுதான் முதற்படி! அடுத்து வரும் சீட்டிழுப்பில்

50 சதம் மட்டும் செலவளித்து-- புத்தம் புதிய காரும் பெருந் தொகையான ரொக்கப்பணமும் பரிசாகப் பெற்றுக் கொள்ளலாம்.

## அடுத்து வரும் சீட்டிழுப்பில் *


**சீட்டிழுப்பு இல. 196, வெலிகமையில் 1968 மே 30-ந் தேதி நடைபெறும்.**




**1வது பரிசு ரூ. 100,000/-** அல்லது புத்தம் புதிய டற்சன் 2000 காரும் ரூ. 78,600/- ரொக்கமும் *



**2வது பரிசு ரூ. 40,000/-** அல்லது புத்தம் புதிய ஒப்பல் கடெ காரும் ரூ. 19,122/- ரொக்கமும்



**3வது பரிசு ரூ. 10,000/-** அல்லது புத்தம் புதிய பியட் 600 காரும் ரூ. 1,600/- ரொக்கமும்



**100 ஆறுதல் பரிசுகள்** ஹம்பர் சைக்கிள். விசேஷமாக குறைக்கப்பட்ட விலையான ரூ. 279/50 க்கு கிடைக்கும்.

கடந்த இரண்டு கார் சுவீப்பில் 100 அதிர்ஷ்டசாலிகள் தலா ரூ. 755-70 பரிசாகப் பெற்றனர்.

இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப்பின் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

## வாரத்துக்குவாரம் நூற்றுக்கணக்கான மக்கள் திடீரெனச் செல்வந்தர் ஆகிவிடுகிறார்கள் 50 சதமே வாழ்க்கையில் அதிர்ஷ்டத்தை அளித்து விடுகிறது!

NLB 4/67 AJNS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தன்

# ரசாயன தொழிற்சாலை விரைவில் விஸ்தரிக்கப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி இலங்கைக்குத் தேவையான முழு 'கோஸ்டிக்' சோடாவையும் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை விஸ்தரிக்கப்படுமெனத் தெரிகின்றது. இதற்கான நடவடிக்கைகளை கைத்தொழில் அமைச்சு மேற்கொள்ளும்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இதனை கிளிநொச்சி எம்.பி திரு. கா. பொ. இரத்தினம் கேட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையில் இலங்கைக்குத் தேவையான மூன்றிலொருபங்கு 'கோஸ்டிக்' சோடாவே இப்போது உற்பத்தி செய்யப்படுகின்றது.

இத்தொழிற்சாலையில் முழு உற்பத்தியையும் மேற்கொள்ள இத்தொழிற்சாலையை விஸ்தரித்தால் வெளிநாட்டுச் செலாவணியை மிகுதிப்படுத்தலாமென திரு. கா. பொ. இரத்தினம் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். (ஈ. நி.)

# 'தமிழ்சிறுரின் கைவண்ணமும் இனி வெளிநாடு செல்லும்'

## தெல்லிப்பழை சித்திரக்காட்சியில் உதவி வித்தியாதிபதி

குரும்பசிட்டி, வியா. "சிறுவர்கள் வாய்திறந்து பேச முன்னர் தமது உணர்ச்சிகள், எண்ணங்களை ஓவியங்கள் வண்ணச்சித்திரங்கள் மூலம் வெளிப்படுத்துகின்றனர். கல்வித்துறையில் சிறுவரின் முதல் முயற்சி இதுவாகும். எனவே எதிர்காலத்தில் பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம்பெற இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி சிறுவர்களுக்கு ஊக்கம் அளித்தல்வேண்டும்" என காங்கேசன்துறை வட்டாரப் பாடசாலைகளின் சிறுவர் சித்திரக் கண்காட்சியை இன்று சாலை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் ஆரம்பித்துவைத்து பேசுகையில் தெரிவித்தார். குத்துவிளக்கேற்றி திரு. தணிகாசலம் காட்சியைத் திறந்துவைத்தார்.

திரு. தணிகாசலம் மேலும் கூறியதாவது:-

"அகில உலக சிறுவர் தினவிழாவிற்கு இங்கைப் பாடசாலைச் சிறுவர்களின் சித்திரங்கள், கட்டுரைகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. வருங்காலத்தில் தமிழ்ச்சிறுர்களின் கைவண்ணங்களும் உலக ரீதியில் நடைபெறும் விழாக்களில் இடம்பெறும் என நம்ப இடமுண்டு.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. பி.பி. ஜெயரத்தினம் பேசுகையில் "புத்தகக்கல்வியுடன் நின்றுவிடாது பல துறைகளிலும் சிறுவர்களுக்குப் போதனை வழங்க ஆசிரியர், பெற்றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் கூறினார். சித்திர வித்தியாதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை நன்றியுரை கூறினார்.

## மாருதப்புரவியை.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"மாருதப்புரவி"யும், யூனைடப் பகுதியில் சேவையிலிருக்கும் 'அமராதேவி'யும்கடந்த 8 மாதமாகியும் பழுதடைந்த நிலையிலேயே உள்ளனவாம். இவற்றின் இயந்திரங்களும் திருத்துவதற்காகக் கொழும்பிற்கு அனுப்பப்பட்டும் இன்னும் திரும்பிவரவில்லையாம்.

'அமராவதி' படகின் இயந்திரம் தற்போது திருத்தியமைக்கப்பட்டு மூதூர் பகுதியில் சேவைக்கு விடப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஈ. நி.)

## வட இலங்கை ...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

### மூன்றும் பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

திருச்செல்வி ஜெருமையா, சுந்தரராணி, புஷ்பவதி அம்பலவாணர், தபோதினி சின்னத்தம்பி, இராஜலட்சுமி மணி, விஜயலட்சுமி மணி, சாவித்திரி நாகலிங்கம், சாந்தகுமாரி கருணாகரன், பாலசுப்புலட்சுமி மீனாட்சிசுந்தரஐயர். சுபத்திரா சுப்பிரமணியம்.

வயலின்

சாந்தினி மகேந்திரன், தபோதினி ஆறுமுகம், இராஜலட்சுமி மணி, விஜயலட்சுமி மணி. பாலசுப்புலட்சுமிமீனாட்சிசுந்தரஐயர்.

### நான்காம்பகுதி

சாதாரணபிரிவு

வாய்ப்பாட்டு

மனோகரி தவி சதாசிவம், வத்சலாதேவி விசுவலிங்கம் கோகிலவர்த்தனி சுப்பிரமணியம்.

வயலின்

வத்சலாதேவி விசுவலிங்கம்.

### ஆசிரியர் பகுதி

சாதாரண பிரிவு

வீணை

அருந்ததி சிவசுப்பிரமணியம்.

## சமுதாயம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் சிறந்தசைவத் தொண்டர்கள் அவர்கள் சமயத்துக்குச் செய்ததொண்டுகள் பல. அத்தகைய சைவமதப் பற்றும் மொழி அபிமானமும் கொண்ட அவர்கள் சைவத்தை அளிக்கக்கூடிய சட்டத்தைக்கொண்டு வந்திருக்க மாட்டார்கள்:

இந்தியாவில் நீண்ட காலமாக இருந்துவந்த வழக்கங்கள் பல ஆண்களுக்கு முன் மாற்றப்பட்டு விட்டன. இங்கும் நல்லூர்இணுவில், நயினாதீவு முதலான இடங்களிலும் மாற்றப்பட்டுள்ளன. இதனால் தீங்கொன்றும் ஏற்படவில்லை.

இன்றைய பிரச்னைகளைச் சீர் தூக்கிப் பார்க்கும்போது நமது சமுதாயத்தின் முன்னேற்றம் கருதி நாமும் சில வழமைகளை மாற்றித்தானாகவேண்டும்'.

திரு மு. குமாரசாமி பேசுகையில் தமிழ் எம். பிக்கள் மரவரியை நீக்க சட்டம் கொண்டுவர வேண்டுமென்றுர்.

பிரம்மஸ்ரீ சுந்தர மூர்த்தி ஐயர், திரு. செ. யோகேந்திரம், திரு. சோமசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

## ஹோட்டலில் விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி செம்மணி மயானத்தில் இறந்து கிடந்த வாலிபனின் சடலம் பற்றி பொலிசாருக்கு மேலும் சில புதிய தகவல்கள்கிடைத்துள்ளன. இதனைத் தொடர்ந்து பொலிசார் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான ஹோட்டல் ஒன்றிற்குச் சென்று நேற்று முன்தினம் விசாரணை நடத்தினார்கள்.

## நீரில் மூழ்கி மரணம்

நல்லூர், வியாழன் மண்டைதீவைச் சேர்ந்த கார்த்திகேசு அகிலாண்டம் (96 வயது) என்பவர்நேற்று தண்ணீர் எடுப்பதற்காக கிணற்றுக்குச் சென்றபோது தவறிக் கிணற்றுக்குள் விழுந்து மரணமானர்.

இது சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையில் காவஞ்சென்ற வயோதிப மாதுவுக்குக்கண்பார்வை குறைந்திருந்ததாகவும் தற்செயலாக கிணற்றுக்குள் விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணை அதிகாரி திரு. வல்லிபுரநாதன் மரணவிசாரணையை நடாத்தி நீரில் மூழ்கியதால் எற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## கவிஞருக்கு அஞ்சலி

பருத்தித்துறை, வியா. மாணவருக்கேற்ற உயரிய ஆசிரியராய் அவர்களுக்குகந்த நூல்கள் பலதுறையிலும் தந்த முன்னேடியாய் பல்லோரும் மெச்சும் நல்ல கவிஞராய் எங்கள் நல்விஷயங்களுக்கு உதவிகள் பல செய்த பெரிய உபகாரியாய் இலங்கிய திரு. வே. சிவக்கொழுந்து(யாழ்ப்பாணன்) அவர்களின் திடீர் மரணம் இலங்கைத் தமிழருக்குச்சொல்லொணுத் துயர் தருவதொன்று. சிறப்பாக நம் கிராமத்துக்கு அதனிலொணுப் பேரிழப்பாகும். இத்தலைவர் ஆன்மா சாந்தியடைகஎன்றுவேண்டி வியாபாரிமூலை சனசமூக நிலையத்தினர் தம் அனுதாபத்தைக் கவிஞர் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளனர்.

## நாளை தேர்தல்

குரும்பசிட்டி, வெள்ளி தெல்லிப்பழைகிராமசபையின் தேர்தல் நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கின்றது மொத்தம் 19 வட்டாரங்களைக்கொண்ட இக்கிராமசபையின் 5 வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் ஏற்கனவே போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி மல்லாகம் கிராமமுன்னேற்றச் சங்கப் பொதுக்கூட்டம் அண்மையில் வலி-வடக்கு காரியாதிகாரி திரு. பற்றிக்ஸ் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. அ. சி. தாமோதரம்பிள்ளை, காரியதரிசி திரு. கா. தியாகராசா பொருளதிகாரி திரு. மு. கதிர்காமத்தம்பி. 12 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## இன்று

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று அதிகாலை 6 மணிக்கும் மாலை 5.30மணிக்கும் பஜனையும் மாலை 5.45 மணிக்கு பிரதோஷ பூசையும் பின் சுவாமி உள்வீதிவலம் வருதலும் மாலை 6 மணிமுதல் இரவு 7மணிவரை திருப்பூங்குடி திரு. வி.க ஆறுமுகம்ஆசிரியர் அவரின் கதாப்பிரசங்கமும்பின்இரவு 7.30 மணிக்கு சக்கிரவார அம்மன் பூசையும் இரவு 8மணிக்கு அர்த்தசாமப் பூசையும் நடைபெறும்.

## திருட்டு வழககு

### குற்றத்தை ஒப்புக்கொண்டனர்

சங்கானை. வியா. அண்மையுல் சங்கானை மாவிலவத்தையில் திருமதி கனகம்மா செல்லத்துரை என்பவரின் வீட்டை உடைத்துப் பெருந்தொகையான பாவனைப் பொருட்களை களவாடியதாகசந்தேகிக்கப்பட்டவர்கள்மீது சங்கானைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 1ம்,2ம் எதிரிகளாகிய தேவதாஸ், கே. இராசரத்தினம் ஆகிய இருவரும் தங்கள் மேல் சுமத்தப்பட்ட மூன்று குற்றங்களையும் ஒப்புக்கொள்ளவே இதற்கு எடந்தையாக இருந்தவர்தளென கருதப்பட்ட ... றவர்களை விடுதலை செய்துகளவாடப்பட்ட பொருட்களை உரிமையாளரிடம் கொடுக்கும்படி உத்தரவிட்ட நீதிபதி திரு எம். சண்முகலிங்கம் தீர்ப்பு வழங்குவதைஇம்மாதம் 27ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## திருமலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான வார்த்தைகளால் கண்டித்தனர்.

## திருமலை டிப்போ பஸ்

யாழ்ப்பாணம் இ. போ. சபை பிராந்திய காரியாலயத்தில் விசாரித்த போது விபத்துக்குள்ளான பஸ் திருமலையிலிருந்து நேற்றிரவு பருத்தித்துறைக்கு வந்து இன்று காலை அங்கிருந்து திருமலைக்குத் திரும்பியதாகவும் அது திருமலை டிப்போவைச் சேர்ந்த பஸ் என்றும் தெரிவித்தனர்.

## தேசிய கவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 30 O 0109 | 19 M 0258 |
| 36 N 0857 | 14 M 0429 |
| 03 A 0514 | 37 L 0640 |
| 19 G 0367 | 33 F 0163 |
| 02 G 0220 | 27 A 0662 |
| 26 H 0816 | 40 N 0364 |
| 17 C 0397 | 40 B 0517 |
| 43 G 0811 | 03 E 0572 |
| 01 J 0697 | 31 K 0796 |
| 21 B 0813 | 21 Q 0011 |
| 03 Q 0584 | 22 P 0589 |
| 31 A 0149 | |
| 25 O 0085 | 42 E 0226 |
| 31 C 0088 | 39 R 0136 |
| 16 Y 0684 | 28 N 0432 |
| 26 K 0416 | 44 M 0243 |
| 29 O 0228 | 10 K 0367 |
| 03 V 0852 | 26 P 0236 |
| 30 X 0553 | 38 D 0413 |
| 20 P 0617 | 22 T 0821 |
| 03 C 0083 | 14 H 0837 |
| 12 H 0457 | 44 E 0521 |
| 29 D 0392 | 02 N 0127 |
| 02 A 0254 | 35 B 0721 |
| 20 T 0866 | 20 Y 0562 |
| 41 N 0192 | 06 J 0584 |
| 43 R 0336 | 15 X 0926 |
| 02 K 0881 | 29 N 0149 |
| 37 X 0838 | 25 F 0413 |
| 34 B 0810 | 51 Y 0851 |
| 32 H 0012 | 35 G 0610 |
| 07 T 0119 | |

O 2ம் பரிசுஇலக்கம்21 F 0146 ஆகவும் இருக்கலாம். (இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்).

சண்டிலிப்பாய் கொலை:

## சந்தேக நபர் றிமாண்டில்

குரும்பசிட்டி, வியா. சண்டிலிப்பாய் கொலைசம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் சங்கானைப் பொலிசார் தவசி செல்வராசா என்பவரை நேற்றுக்கைது செய்தனர். மற்றும் சந்தேக நபர்களை பொலிசார் தேடி வருகின்றனர்.

சங்கானை வாசியான கே. தம்பிஐயா கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து சங்கானைப் பகுதியில் பொலிஸ் பந்தோபஸ்து மேலும் அதிகரிக்கப்பட்டது. மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டசந்தேக நபர் செல்வராசா ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 27-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## ஏற்பு வலியால் மரணம்

திருக்கோணமலை, வியா. முயல் வேட்டைக்குச் சென்றதன் பயனாக ஒருவர் ஏற்புவலிக்கு மரணமானர். திருக்கோணமலை தொழிற்சாலையில் கடமையாற்றும் 8 பிள்ளைகளின் தந்தையான மகாதேவன் என்பவரே மரணமானவராவார்.

மரணமானவர் அண்மையில் முயல் வேட்டைக்குச் சென்றபோது அவரது காலில் இரும்புத் துண்டு ஒன்று காயமுண்டுபண்ணியதாகவும் இதனால் ஏற்பட்ட ஏற்பு வலியால் இவர் மரணமானதாகவும் மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது

ஏற்பு வலியால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

கிளிநொச்சி, வியாழன் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள கள்ளு விற்பனை நிலையங்களில் சூதாட்டம் போன்ற தீய செயல்கள் நடைபெறுவதாகத் தெரிய வருகிறது. இதனால் சண்டை சச்சரவுகள் இடம்பெறுகின்றன. இக்கள்ளுக் கடைகள் இரவு12—1மணிவரைதிறந்திருப்பதால் வயது வந்த பெண்கள் பிள்ளைகள் நடமாடுவது பெரும் கஷ்டமாயிருக்கின்றது.

## மரண அறிவித்தல்

கோண்டாவில் பொன்னர் சுப்பையா, முன்னைநாள் கொந்துராத்துக்காரர், செல்லாச்சியின் அருமைக் கணவர் தம்பித்துரை நொதேண் ஓட்ட வேக்ஸ், ஸ்ராலி வீதி, யாழ்ப்பாணம். சபாரத்தினம். உள்நாட்டு இறைசேரி அலுவலகம், நவரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் தந்தையாவர். இன்று மாலை 2 மணிக்கு கோண்டாவில் மயானத்திற்கு தகனக்கிரிகைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். அறிவிப்பவர்: அ. தம்பித்துரை. 1545

## மரண அறிவித்தல்

இ. போ. ச.சேர்ந்தஇளையதம்பி சிவஞான சுந்தரம் காலமாகிவிட்டார்.

இவர் இளையதம்பியின் புதல்வனும், ராசேஸ்வரியின் அருமைத்தம்பியும், ஆசிரியர் இராசரத்தினத்தின் மைத்துனரும், இராசகுலசிங்கத்தின் தம்பியுமாகியவர். சமைக்கிரிகைகள் 24. 5. 68. மாலை நாலு மணிக்கு ஏழாலை வடக்கு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

இப்படிக்கு
1544 சத்தியநேசன்

இலங்கையில் ... "ஈழநாடு" லிமிடெட் ... கோவில் வீதி 68-ம் ... மே மாதம் 24-ம் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org